முழுப்பதிப்புரிமையுடையது / All Rights Reserved

**DEVELOPMENT COMMITTEE OF EDUCATION – Mallavi** இனால்

நடாத்தப்படும் க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான விசேட பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு - 2019

பாடம் - கணக்கீடு திகதி – **09.07.2019**

**Mr.Kugan Kumarasamy B.Com (Hons) Acc.Spl**

1. கணக்கீட்டின் அடிப்படை நோக்கமாக அமைவது பின்வருவனவற்றுள் எது?
   1) கணக்கு புத்தகங்களில் எல்லா கொடுக்கல் வாங்கல்களையும் பதிவு செய்தல்.
   2) தீர்மானம் மேற்கொள்வதற்கான தகவல்களை பாவனையாளர்களுக்கு வழங்குதல்.
   3) முகாமைக்கு விபரமான தேவையான கிரயப் பகுப்பாய்வினை வழங்குதல்.
   4) நிதிக் கொடுக்கல் வாங்கல்களை திரட்டுதலும் வகைப்படுத்தலும்.
   5) நிறுவனமொன்றுக்கு நிதிக்கூற்றுக்களினுடாக நிதிப் பெறுபேறுகளை வழங்குதல்.

**2.** 2015 இன் ரூபா 2,000,000 இற்கு வாங்கப்பட்ட காணியொன்று 2017.03.31 இல் உள்ளபடியான நிதிநிலமைக்கூற்றில் இதன் மீள் மதிப்பீட்டு தொகை ரூபா 3,000,000 என பதியப்பட்டிருந்தது. இச்சந்தர்ப்பத்தில் எக் கணக்கீட்டு எண்ணக்கரு பின்பற்றப்படவில்லை?
   1) தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு.
   2) பொருண்மை எண்ணக்கரு.
   3) தோற்றத்திலும் பார்க்க கருத்து முக்கியத்துவம்
   4) வரலாற்றுக்கிரய எண்ணக்கரு.
   5) அட்டுறு எண்ணக்கரு.

3. சுமன் மண் அகழ்வு வியாபாரமொன்றை 2015 ஆம் ஆண்டில் ஆரம்பித்தார். இவ் வியாபாரத்தின் நிதிப்பெறுபேற்றை நிர்ணயிப்பதற்கு அகழ்வு முடியும் வரை காத்திருக்கிறார் இத் தீர்மானத்தில் கீழே தரப்பட்டுள்ள கணக்கீட்டு கொள்கைகளில் எக் கொள்கை அடிப்படையாக மீறப்பட்டுள்ளது?
   1) தேறல்
   2) நிலுவை
   3) பொருத்தப்பாடு
   4) கால அடிப்படை
   5) தொடந்து செல்லும்

4. ஒரு வருடத்தில் கொள்வனவு செய்த சரக்குகளின் கிரயத்தின் ஒரு பகுதியாக விற்ற சரக்கின் கொள்விலை செலவு ஆகவும் மீதியை வருட இறுதியில் சொத்துக்களாகவும் இனங்காண்பதற்கு அடிப்படையாக அமையும் கணக்கீட்டு எண்ணக்கரு.
   1) தொடர்ந்து செல்லல் 4) இணைதல்
   2) தேறல் 5) வரலாற்றுகிரயம்
   3) அட்டுறு

5. வரலாற்று கிரய அடிப்படையில் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதன் காரணத்தால் போதியளவு கவனத்திற்கு உட்படாத கணக்கீட்டு தகவல்களின் முதந்தர பண்பு ரீதியான இயல்பு.
   1) நம்பகத்தன்மை
   2) ஒப்பீட்டு தன்மை
   3) மாறாத்தன்மை
   4) நடுநிலைத்தன்மை
   5) பொருத்தப்பாட்டுத்தன்மை

kalvi.lk

6. வியாபாரமொன்றின் இலாபத்தை கணிப்பீடு செய்வதற்கு பயன்படுத்தக்கூடிய சமன்பாடு
   1) ஆரம்ப தேறிய சொத்துக்கள் - இறுதி தேறிய சொத்துக்கள் - பற்றுக்கள் + மேலதிக மூலதனம்
   2) ஆரம்ப தேறிய சொத்துக்கள் - இறுதி தேறிய சொத்துக்கள + பற்றுக்கள் - மேலதிக மூலதனம்
   3) இறுதி தேறிய சொத்துக்கள் - ஆரம்ப தேறிய சொத்துக்கள் + பற்றுக்கள் - மேலதிக மூலதனம்
   4) இறுதி தேறிய சொத்துக்கள் - ஆரம்ப தேறிய சொத்துக்கள் - பற்றுக்கள் - மேலதிக மூலதனம்
   5) இறுதி தேறிய சொத்துக்கள் + ஆரம்ப தேறிய சொத்துக்கள் - பற்றுக்கள் - ஆரம்ப மூலதனம்

7. தனி வியாபாரமொன்றில் உரிமையாண்மையை இதில் கொடுக்கப்படும் கொடுக்கல் வாங்கல்கள்களில் எது தாக்கத்தை ஏற்படுத்தாது?
   1) உரிமையாளரால் எடுக்கப்படும் காசு
   2) விற்பனையால் பெறப்படும் காசு
   3) உரிமையாளரால் இடப்படும் முதலீடு
   4) உழைக்கப்படாத வருமானத்தின் காசுப் பெறுவனவு
   5) செலவுகளுக்கான காசுக்கொடுப்பனவு

8. நிதி நிலமைக்கூற்றில் குறித்த விடயமொன்று சொத்து என அடையாளப்படுத்துவதற்கு கீழே தரப்பட்டுள்ள எது அவசியமற்றது?
   1) உருப்படியொன்றின் எதிர்பார்க்கப்படும் எதிர்கால நன்மை வியாபாரத்தினால் கட்டுப்படுத்தப்படல்
   2) இது பெரும்பாலும் எதிர்கால பொருளாதார நன்மைகளை கொண்டிருத்தல்
   3) இது வியாபாரத்திற்கு சட்ட ரீதியாக சொந்தமாக்கப்பட்டிருத்தல்
   4) இது கடந்தகால கொடுக்கல் வாங்கல் விளைவினால் எழுதல்
   5) இதன் கிரயத்தை நம்பத்தகு முறையில் மதிப்பிட முடிதல்

9. நிறுவனமொன்றினால் பெற்றுக்கொள்ளப்பட்ட இயந்திரம் தொடர்பாக ஏற்பட்ட சில கிரயங்கள் வருமாறு
   a) இயந்திரத்தை நல்ல நிலையில் வைத்திருப்பதற்காக ஏற்பட்ட கிரயங்கள்
   b) இயந்திரத்தை அமைக்க திட்டமிடப்பட்ட இடத்திற்கு கொண்டு வருவதற்கு ஏற்பட்ட போக்குவரத்து கிரயம்
   c) இயந்திரம் செயற்பாட்டு நிலையில் இருந்த வேளை உதிரிப்பாகங்களை மாற்றீடு செய்ததினால் ஏற்பட்ட கிரயங்கள்
   d) இயந்திரத்தை பொருத்துவதற்கு ஏற்பட்ட கிரயங்கள்

   மேலே கூறப்பட்டுள்ளவற்றுள் எக்கிரய விடயங்கள் இவ் இயந்திர கிரயமாக மூலதனமாக்கப்படல் வேண்டும்?
   1) b,c,d
   2) a,b,d
   3) a,c
   4) b,d
   5) a,c,d

10. பின்வரும் கூற்றுக்களுள் எக்கூற்று இரட்டை பதிவு முறைமை தொடர்பாக பிழையானதாகும்.
    1) இரட்டை பதிவு முறைமையானது கணக்கீட்டு சமன்பாட்டிற்கான அடிப்படையை வழங்குகின்றது.
    2) இது கொடுக்கல் வாங்கல்களை பேரேட்டிற்கு மாற்றுகின்ற ஒரு முறையாகும்.
    3) இது ஒவ்வொரு வரவுப் பதிவுக்கும் ஒரு ஒத்திசைவான செலவுப்பதிவு காணப்படுதல் வேண்டும் என்கின்ற ஒரு அடிப்படை விதியாகும்.
    4) இது பேரேட்டுக்கு மாற்றப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் எண்கணித செம்மையை உறுதிப்படுத்த உதவுகின்றது.
    5) இது எல்லா கொடுக்கல் வாங்கல்களும் பேரேட்டில் சரியாக பதிவிடப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துகின்றது.

**கீழே தரப்படுகின்ற தகவல்களை பயன்படுத்தி 11 ஆம் 12 ஆம் வினாக்களுக்கு விடை தருக?**

ஒரு நிறுவனம் பொருட்களை ரூ 25,000 இற்கு கடனுக்கு விற்பனை செய்தது. இது தொடர்பாக இவ் வாடிக்கையாளரிடமிருந்து ரூ 22 500 பெறப்பட்டதும் மிகுதி பணத்தை பெற முடியவில்லை

11. மேலே கூறிய கொடுக்கல் வாங்கல்களை பதிவிடுவதற்கு தேவையான மூல ஆவணங்கள்
    1) விற்பனைபட்டியல் , பற்றுச்சீட்டு , வரவுத்தாள்
    2) விற்பனைபட்டியல் , பற்றுச்சீட்டு , நாட்குறிப்பு கைச்சாத்து
    3) விற்பனைபட்டியல் , பற்றுச்சீட்டு , செலவுத்தாள்
    4) விற்பனைபட்டியல் , நாட்குறிப்பு கைச்சாத்து , வரவுத்தாள்
    5) நாட்குறிப்பு கைச்சாத்து , பற்றுச்சீட்டு , செலவுத்தாள்

12. மேலே கூறிய கொடுக்கல் வாங்கல்களை பதிவிடுவதற்கான முதன்மை பதிவேடுகள்
    1) விற்பனைநாளேடு , காசேடு , விற்பனைத்திரும்பல்நாளேடு
    2) விற்பனைநாளேடு , காசேடு , பொதுநாட்குறிப்பேடு
    3) விற்பனைநாளேடு , காசேடு
    4) விற்பனைநாளேடு , பொதுநாட்குறிப்பேடு
    5) பொதுநாட்குறிப்பேடு , காசேடு

13. மோட்டார் வாகன வியாபாரக் கம்பனியொன்று பாவனை செய்யப்பட்ட கார் ஒன்றினை 2015 மே 30 இல் ரூ 1,300,000 இற்கு வாங்கியதுடன் தரகருக்கு ரூ 20,000 ஐ செலுத்தியது. இறக்குமதி வரியின் திடீர் குறைப்பின் காரணமாக 2015.06.30 இல இக்காரின் தேறிய பெறுமதி ரூ 800,000 என மதிப்பிடப்பட்டதும் இத்திகதியில் மதிப்பிடப்பட்ட விற்பனை தரகு ரூ 30,000. 2015.06.30 இல் முறையே இக் காரின் கிரயமும் தேறிய தேறக்கூடிய பெறுமதியும் .
    1) ரூ 1,300,000 , ரூ 770,000
    2) ரூ 1,320,000 , ரூ 780,000
    3) ரூ 1,000,000 , ரூ 830,000
    4) ரூ 1,320,000 , ரூ 770,000
    5) ரூ 1,320,000 , ரூ 800,000

kalvi.lk

**14 15 ஆம் வினாக்களுக்கு பின்வரும் தகவல்களை பயன்படுத்தி விடையளிக்க.**

வரையறுத்த சுதன் கம்பனியின் 2017.03.31 இல் நிதிக்கூற்றுக்களில் இருந்து பெறப்பட்ட தகவல்களும் சில பகுப்பாய்வு விகிதங்களும் வருமாறு

- ❖ கடன் விற்பனை ரூ 400,000
- ❖ இருப்பு சுழற்சி வீதம் 4 தடவைகள்
- ❖ மொத்த இலாப வீதம் 25%
- ❖ கடன் சேகரிப்பு காலம் 03 மாதங்கள்

14. நிறுவனத்தின் சராசரி இருப்பு
    1) ரூ 75,000
    2) ரூ 7,500
    3) ரூ 60,000
    4) ரூ 30,000
    5) ரூ 37,500

15. நிறுவனத்தின் சராசரி கடன்பட்டோர்
    1) ரூ 10,000
    2) ரூ 15,000
    3) ரூ 50,000
    4) ரூ 100,000
    5) ரூ 200,000

Education கல்வி அධ්‍යාපන

16. ஒரு நிறுவனத்தின் தகவல்களில் நிதிநிலமை, நிதிச்செயற்பாடு, நிதி நிலமையில் ஏற்படும் மாற்றம் என்பவற்றை முறையே எடுத்துக்காட்டும் நிதிகூற்றுக்கள்
    1) காசுப்பாய்சல் கூற்று , வருமானக்கூற்று , நிதிநிலமைக்கூற்று
    2) வருமானக்கூற்று , காசுப்பாய்சல் கூற்று , நிதிநிலமைக்கூற்று
    3) உரிமை அசைவுக்கூற்று , நிதிநிலமைக்கூற்று , வருமானக்கூற்று
    4) சொத்தசைவுக்கூற்று , வருமானக்கூற்று , காசுப்பாய்சல் கூற்று
    5) நிதிநிலமைக்கூற்று , வருமானக்கூற்று , உரிமை அசைவுக்கூற்று

17. இறுதி இருப்பினை குறைவாகக் காட்டும் போது வருமானக்கூற்றின் உருப்படிகளில் ஏற்படம் தாக்கமாக அமைவது?
    1) விற்பனைக்கிரயம் கூடுதலாகவும் தேறிய இலாபம குறைவாகவும் காணப்படும்.
    2) விற்பனைக்கிரயம் குறைவாகவும் தேறிய இலாபம் குறைவாகவும் காணப்படும்
    3) விற்பனைக்கிரயம் குறைவாகவும் தேறிய இலாபம் கூடுதலாகவும் காணப்படும்
    4) விற்பனைக்கிரயம் கூடுதலாகவும் தேறிய இலாபம் கூடுதலாகவும் காணப்படும்
    5) விற்பனைக்கிரயம் கூடுதலாகவும் தேறிய இலாபம் கூடுதலாகவும் காணப்படும்

18. 2016.3.31 இல் அட்டுறு மின் கட்டணம் ரூ 12,000 ஆகவும் இருந்தது 2017.03.31 இல் முடிவுற்ற வருடத்தில் செலுத்தப்பட்ட மின் கட்டணம் ரூ 160,000 இதில் 2017 ஏப்ரல் 30 இல் முடிவுற்ற காலாண்டுக்கான ரூ 48,000 இற்கான மின் பட்டியலை உள்ளடக்கி இருந்தது. 2017.03.31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான மின் கட்டணமாக வருமானக்கூற்றில் தாக்கல் செய்யப்பட வேண்டிய தொகை யாது?

1) ரூ 132,000
2) ரூ 156,000
3) ரூ 164,000
4) ரூ 184,000
5) ரூ 172,000

19. உற்பத்திப் பொருளொன்றின் உற்பத்தி மட்டங்களும் அலகுக் கிரயங்களும் பின்வருமாறு

| உற்பத்தி மட்டம் (அலகுகள்) | அலகுக்கிரயம் |
|---|---|
| 500 | 100 |
| 600 | 90 |

பின்வருவனவற்றுள் எது முறையே அலகு மாறும் , கிரயம் மொத்த நிலையான கிரயம் என்பவற்றை காட்டுவது?

1) 40 30,000
2) 10 50,000
3) 40 54,000
4) 10 24,000
5) 20 34,000

20. பின்வரும் தகவல்களின் அடிப்படையில் கணக்கீட்டு வருடமொன்றில் ஒரு நிறுவனத்தின் செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்களில் ஏற்படும் அதிகரிப்பு அல்லது குறைவு எவ்வளவு?

- ❖ வருடத்தின் இலாபம் ரூ 120,000
- ❖ பெறுமானத்தேய்வு ரூ 20,000
- ❖ வியாபார கடன்பட்டோரில் அதிகரிப்பு ரூ 60,000
- ❖ கூலிக்கொடுப்பனவில் குறைவு ரூ 40,000
- ❖ முன் செலுத்திய செலவுகளில் குறைவு ரூ 50,000

1) 10,000 குறைவு
2) 90,000 அதிகரிப்பு
3) 140,000 அதிகரிப்பு
4) 150,000 அதிகரிப்பு
5) 190,000 அதிகரிப்பு

21. கணக்கீடொன்றில் வியாபாரக் கடன்பட்டோரில் மீதியானது ரூ 40,000 ஆல் அதிகரித்தும் அதே ஆண்டில் கடன் விற்பனையானது ரூ 200,000 ஆகவும் காணப்படும் எனத் தரப்படின் வியாபாரக் கடன்பட்டோரிடமிருந்து பெற்ற காசு எவ்வளவாகும்.

1) ரூ 40,000
2) ரூ 120,000
3) ரூ 160,000
4) ரூ 200,000
5) ரூ 240,000

kalvi.lk

22. பின்வரும் சமன்பாடுகளில் எது உற்பத்தி கிரயத்தை தீர்மானிக்கப் பயன்படுத்தப்படும்.
   1) மூலக்கிரயம் + மேந்தலைகிரயம்
   2) மூலக்கிரயம் + நிலையான உற்பத்தி மேந்தலை கிரயம்
   3) நேர்க்கிரயம் + மாறும் மேந்தலை கிரயம்
   4) மூலக்கிரயம் + மேந்தலை கிரயம் - உற்பத்தி மேந்தலை கிரயம்
   5) நேர் மூலப்பொருட் கிரயம் + மூலக்கிரயம் - மாறும் உற்பத்தி மேந்தலை கிரயம்

23. நேர் ஊழிய கிரயத்தின் அடிப்படையில் மேந்தலைகளை உறிஞ்சும் கம்பனியொன்றில் பின்வரும் தகவல்கள் தரப்படுகிறது
   - நேர் ஊழியம் 400,000
   - நேர் மூலப்பொருள 800,000
   - தொழிற்சாலை மேந்தலை 1,000,000
   - இறுதி சரக்கின் பெறுமதி 44,000 (இதனுள் நேர் மூலப்பொருள் கிரயம ரூபா 16,000 உள்ளடங்கியுள்ளது)

   மேந்தலை உறிஞ்சும் வீதம் மற்றும் இறுதி சரக்கினால் உறிஞ்சப்பட்ட மேந்தலையின் தொகை என்பன எது?

| | மேந்தலை உறிஞ்சல் வீதம் | உறிஞ்சப்பட்ட மேந்தலை |
|---|---|---|
| 1) | 400 | 24,000 |
| 2) | 125 | 20,000 |
| 3) | 250 | 16,000 |
| 4) | 200 | 8,000 |
| 5) | 250 | 20,000 |

**பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 24 ஆம் 25 ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

2016.06.01 இல் கம்பனியொன்றில் ஆரம்ப சரக்கிருப்பாக ரூ 5,000 (ஒவ்வொன்றும் ரூ 25 படி 200 அலகுகள்) இருந்தது. இக்கம்பனியானது வழங்கப்படும் சரக்குகளுக்கு விலையிடுவதற்கு முதல் வந்தது முதல் வெளி முறையை பயன்படுத்துகின்றது. 2016 யூன் மாதத்தில் பின்வரும் பெறுவனவுகளும் வழங்கல்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

- யூன் 05 பெற்றது 300 அலகு 24 படி
- யூன் 10 பெற்றது 200 அலகு 28 படி
- யூன் 30 வழங்கியது 600 அலகு

24. 2016 யூன் மாதத்திற்கான விற்பனை கிரயம்
1) 12,800
2) 15,000
3) 15,300
4) 27,800
5) 28,100

kalvi.lk

25. 2016 யூன் 30 இல் உள்ள சரக்கிருப்பின் பெறுமதி

1) 2,400
2) 2,800
3) 2,500
4) 17,500
5) 17,800

26. ஒரு செயற்திட்டத்திலிருந்து எழும் பின்வரும் காசுப்பாய்சல்களில் எது தேறிய நிகழ் கால பெறுமதி முறையின் அடிப்படையில் மதிப்பிடப்படும் தேறிய காசுப்பாய்சலினை கணிப்பதுடன் தொடர்பற்றதாக இருப்பது

1) வருமானம்
2) வட்டிச் செலவுகள்
3) செயற்பாட்டு செலவுகள்
4) தொழிற்படு மூலதனம்
5) ஆரம்ப முதலீடு

27. பின்வரும் தகவல்களது 2017.03.31 இல் உள்ளபடியான வரையறுத்த சாயி கம்பனியின் மூன்று வகையான சரக்கிருப்பின் மீதிகள் தொடர்பானவை

| மூலப்பொருள் வகை | கிரயம் (அலகுகள்) | e;fuj jF ngWkj; (அலகுகள்) | மிகுதி (அலகுகள்) |
|---|---|---|---|
| A | 20 | 30 | 1,000 |
| B | 30 | 25 | 1,000 |
| C | 50 | 40 | 1,000 |

சரக்குகளானது உருப்படி அடிப்படையில் மதிப்பிடப்படின் சாயி கம்பனியின் 2017.03.31 இல் உள்ளவாறான நிதிநிலமை கூற்றில் காணப்படும் சரக்கின் பெறுமதி

1) ரூபா 25,000
2) ரூபா 60,000
3) ரூபா 85,000
4) ரூபா 95,000
5) ரூபா 100,000

**28, 29, 30 ஆகிய வினாக்களுக்கு பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி விடை தருக.**

கம்பனியொன்றில் வருடாந்த அறிக்கையில் பிரசுரிக்கப்பட்ட நிதிநிலமைக்கூற்றிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவை.

| விபரம் | 2017.03.31 | 2016.03.31 |
|---|---|---|
| கூறப்பட்ட மூலதனம் | 200,000,000 | 150,000,000 |
| பகிரப்படாத இலாபம் | 15,350,000 | 13,150,000 |
| பொது ஒதுக்கம் | 6,000,000 | 5,800,000 |
| மொத்த சொத்துக்கள் | 75,000,000 | 52,000,000 |

- 2017.03.31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு செலுத்தப்பட்ட பங்கிலாபம் ரூபா 350,000 ஆகும்
- 2017.03.31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான வரி ரூ 800,000ஆகும்

kalvi.lk

28. 2017.03.31 முடிவடைந்த ஆண்டிற்கான இலாபம்
    1) 1,400,000
    2) 1,950,000
    3) 2,200,000
    4) 2,400,000
    5) 2,750,000

29. 2017.03.31 இல் முடிவடைந்த ஆண்டில் உரிமையாண்மையில் ஏற்பட்ட அதிகரிப்பு
    1) 2,200,000
    2) 2,750,000
    3) 50,000,000
    4) 52,200,000
    5) 52,400,000

30. 2017.03.31 இல் உள்ளவாறான மொத்த சொத்துக்களின் பெறுமதி
    1) 146,350,000
    2) 200,000,000
    3) 221,350,000
    4) 275,000,000
    5) 246,350,000

31. பொறுப்புக்கும், உரிமையாண்மைக்கும் இடையிலான ஒத்ததன்மை ஒன்றையும் வேறுபாடு ஒன்றையும் குறிப்பிடுக?

    ஒத்த தன்மை:……………………………………………………………………………………

    வேறுபாடு:…………………………………………………………………………………………

32. ரூபா 1,000,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்டதும் 2016.03.31 இல் முதன்முறையாக மீள்மதிப்பீடு செய்யப்பட்டதுமான நிலமொன்று திரும்பவும் 2017.03.31 இல் மீள்மதிப்பீடு செய்யப்பட்டது. இரண்டாம் மீள்மதிப்பீட்டின் பின் நிலத்தின் உடனடியான முன்கொண்டு செல்மீதி ரூபா 1,200,000 ஆகவும் இரண்டாம் மீள்மதிப்பீட்டில் உருவாகிய மேலதிகம் ரூபா 50,000 ஆகவும் இருந்தது.

    அ. நிலத்தினை முதல் தடவை மீள்மதிப்பீடு செய்தபோதிருந்த பெறுமதி என்ன?

    ………………………………………………………………………………………………

    ஆ. இரண்டாம் மீள்மதிப்பீட்டின் பின்னர் 2017.03.31 இலுள்ள மீள்மதிப்பீட்டு ஒதுக்கல் கணக்கின் மீதி?

    ………………………………………………………………………………………………

33. சிக்கன கட்டளைத்தொகை (EOQ) மாதிரியின் இரண்டு எடுகோள்களை எழுதுக?

    ………………………………………………………………………………………………

    ………………………………………………………………………………………………

kalvi.lk

34. கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு நடவடிக்கைகளுக்கும் இருப்புக்கட்டுப்பாட்டு நோக்கத்திற்காகப் பாவிக்கப்படும் ஓர் ஆவணத்தின் பெயரைக் குறிப்பிடுக?

1. உற்பத்திப் பகுதியானது மூலப்பொருட்களை களஞ்சியத்திடமிருந்து வேண்டி நிற்கின்றது.

……………………………………………………………………………………

2. களஞ்சியமானது வெளிவாரி விநியோகத்தரிடமிருந்து பெற்ற பொருட்களுக்கான பெறுகையினை உறுதி செய்கின்றது.

……………………………………………………………………………………

35. பிற்போடப்பட்ட வருமானச்செலவினங்களுக்கு இரண்டு உதாரணம் தருக?

……………………………………………………………………………………………………

……………………………………………………………………

36. நிறுவனமொன்றின் 2017 பெப்ருவரி மார்ச் மாதங்களுக்கான ஊழியர் சேமலாப நிதிப்பங்களிப்பு விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | பெப்ருவரி | மார்ச் |
|---|---|---|
| தொழில் தருனர் | 25,000 | 23,000 |
| ஊழியர்கள் | 20,000 | 15,000 |

குறிப்பிட்ட மாதமொன்றுக்கான ஊ.சே.நிதிப்பங்களிப்பு தொகையானது மத்தியவங்கிக்கு அடுத்துவரும் மாதத்தில் அனுப்பப்படுகின்றது.

அ. 2017 பெப்ருவரி மாதத்துக்கான கம்பனியின் ஊ.சே.நிதிச்செலவு என்ன?

……………………………………………………………………………………

ஆ. 2017.03.31 இல் கம்பனியினால் செலுத்தப்பட வேண்டிய ஊ.சே.நிதிப்பங்களிப்பு என்ன?

……………………………………………………………………………………

37. 2017.03.31 அல் யதி வியாபாரத்தின் களஞ்சியசாலையில் தீ விபத்து ஏற்பட்டு இதனுள் இருந்த இருப்புக்களுள் ஒருபகுதி முழுமையாக அழிவடைந்தன. அழிவடையாமல் எஞ்சிய இருப்புக்களின் கிரயம் ரூபா 50,000 பின்வரும் தகவல்களும் தரப்பட்டுள்ளன.

- 2017.03.31 இல் இருப்புக்களின் கிரயம் ரூபா 300,000.
- 2017 மார்ச் மாதத்தினுள் இடம்பெற்ற விற்பனை ரூபா 150,000
- மொத்த இலாபம் விற்பனைக் கிரயத்தில் 25%
- இக்காலத்தினுள் கொள்வனவுகள் எதுவம் இடம்பெறவில்லை

அழிவடைந்த சரக்குகளின் கிரயத்தை கணிப்பிடுக?

38. சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்கையில் கூடியவரை உறுதிப்படுத்த வேண்டிய கணக்கீட்டு தகவல்களின் பண்புரீதியான இயல்பினை குறிப்பிடுக?

……………………………………………………………………………………

39. வணிகமொன்றின் பங்காளரான அவன், அவள் என்போர் இலாபத்தை சமமாக பகிர்வதனால் இலாபத்தை நடைமுறைக்கணக்கில் மாற்றுவதற்கு பதிலாக பொது ஒதுக்கக்கணக்கில் பராமரிக்கின்றனர். மேலும் பற்றுக்களுக்கும் தனித்தனியான கணக்குகளை பராமரிக்கின்றனர். 2016.04.01 இல் அது இலாபத்தில் சமபங்கு பெறும் வகையில் புதிய பங்காளராக சேர்ந்துள்ளார்.

kalvi.lk

2017.03.31 இல் அது பங்குடமை கணக்கு தொடர்பில் போதிய அறிவை கொண்டுள்ளமையினால் சரியான முறையில் கணக்குகள் தயாரிக்க இணங்கிக் கொள்ளப்பட்டது.

மார்ச் 31 இலுள்ளவாறான கணக்குகளில் மீதிகள் வருமாறு

| | 2016 | 2017 |
|---|---|---|
| பொது ஒதுக்ககணக்கு | 90,000 | 150,000 |
| பற்றுக்கள் - அவன் | 20,000 | 20,000 |
| அவள் | 25,000 | 35,000 |
| அது | – | 10,000 |

2017.03.31 இலுள்ள அவன், அவள், அது என்போரின் நடைமுறைக்கணக்கு மீதிகள் யாவை?

……………………………………………………………………………………………

40. நிறுவனமொன்று 2016.10.01 இல் இயந்திரமொன்றை பெறுவதற்கு ரூபா 200,000 ஐ காசாக செலுத்தியும் 2016.03.31 இல் முன்கொண்டு செல்மீதி ரூபா 300,000 ஐக் கொண்டுள்ள வாகனமொன்றை ரூபா 400,000 இற்கு ஒப்புக்கொண்ட விலையில் பகுதிமாற்றம் செய்தும் பெற்றுக்கொண்டது. பகுதிமாற்றம் செய்யப்பட்ட வாகனத்தின் வருடாந்த பெறுமானத்தேய்வு ரூபா 100,000 ஆகும். இயந்திரங்கள் கிரயத்தில் வருடாந்தம் 20% பெறுமானத்தேய்விடப்படுகின்றது.

அ. 2017.03.31 இல் உள்ளவாறான இயந்திரத்தின் முன்கொண்டு செல் மீதி?

……………………………………………………………………………………………

ஆ. வாகன பகுதி மாற்றத்தினால் ஏற்பட்ட இலாபம்/நட்டம்?

……………………………………………………………………………………………

41. வரையறுத்த குமுது தனியார் கம்பனியின் வருமானக்கூற்று கீழே தரப்பட்டுள்ளது. A,B,C,D,E,F ஆகிய எழுத்துக்களால் குறிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடத்திலும் பிரயோகிக்கப்படும் கணக்கீட்டு எண்ணக்கருவை குறிப்பிடுக.

வரையறுத்த குமுது தனியார் கம்பனி (A)

2017.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக்கூற்று (B)

| | '000' (C) |
|---|---|
| விற்பனைகள் | 1,000 (D) |
| விற்பனைக்கிரயம் | (600) (E) |
| மொத்த இலாபம் | 400 |
| செலவுகள் | (150) (F) |
| தேறிய இலாபம் | 250 |

A-………………………………………………………

B-………………………………………………………

C-………………………………………………………

D-………………………………………………………

E-………………………………………………………

F-………………………………………………………

kalvi.lk

42. வருமானக்கூற்றிலும் நிதிநிலைமைக்கூற்றலும் நிரற்படுத்தக்கூடிய வரலாற்று தகவல் ஒன்றினையும் மதிப்பீட்டுத் தகவல் ஒன்றினையும் குறிப்பிடுக?

| | வருமானக்கூற்று | நிதிநிலைமைக்கூற்று |
|---|---|---|
| வரலாற்றுத்தகவல் | ………………………. | ………………… |
| மதிப்பீட்டுத்தகவல் | ………………………. | ………………… |

43. நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தலுக்கான இலங்கை கணக்கீட்டு நியமத்தின்படி நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது பின்பற்றப்படவேண்டிய அடிப்படை எண்ணக்கரு எது?

………………………………………………………………………………………

44. பின்வரும் கணக்குகள் வரவு மீதியா செலவு மீதியா என்பதை குறிப்பிடுவதுடன் அதன் கணக்கு வகைகளையும் தருக?

| மீதிகள் கணக்குகள் | ……………… | ………………… |
|---|---|---|
| ஊழியர் சம்பள முற்பண கணக்கு | ……………… | ………………… |
| ஊழியர் சேமலாப நிதிச் செலவுக்கணக்கு | ……………… | ……………… |
| ஊழியர் நம்பிக்கை நிதியக் கணக்கு | ……………... | ………………. |
| ஊழியர் கடன் கணக்கு | ……………… | ……………….. |

45. வணிகத்தில் இருந்த சில்லறை காசு கட்டுநிதி ரூபா 5,000 ஆகும். இந்நிதி விரைவாக செலவாவதாகக் கருதி கட்டுநிதியை ரூபா 7,500 ஆக அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதற்காக 2017 ஏப்ரல் மாத இறுதியில் ரூபா 7,200 செலுத்தி மீள்நிரப்பல் செய்யப்பட்டது.

அ. சில்லறைக் காசிலிருந்து ஏப்ரல் மாதம் செலுத்தப்பட்ட தொகை?

………………………………………………………………………………………

ஆ. கட்டுநிதியை நிரப்புதல் சில்லறை காசிலிருந்து செலவிடுதல் தொடர்பான நாட்குறிப்பு பதிவுகள்?

………………………………………………………………………………………

46. தம்பி, தும்பி ஆகியோர் இலாப நட்டங்களை 2:1 எனும் விகிதத்தில் பகிரும் பங்குடமை ஒன்றின் பங்காளர்களாவர். இப்பங்குடமையில் 1/5 இலாபப் பங்குடன் நம்பி என்பவர் பங்காளராக அனுமதிக்கப்பட்டார். புதிய பங்காளராக சேரும் போது நன்மதிப்பானது ரூபா 90,000 ஆக மதிப்பிடப்பட்டது. பங்காளர் நன்மதிப்பை புத்தகங்களில் காட்டாமல் மூலதனக்கணக்கினூடாக சீராக்கம் செய்ய தீர்மானித்துள்ளனர்.

அ. தம்பி, தும்பி, நம்பி பங்காளர்களின் புதிய இலாபநட்ட விகிதாசாரம் யாது?

………………………………………………………………………………………

ஆ. நன்மதிப்பு தொடர்பான சீராக்கத்திற்கு நாட்குறிப்பு பதிவை பெறுமதிகளுடன் தருக?

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

47. கடன்பட்டோன் ஒருவனிடமிருந்து பெற்ற காசோலை ஒன்று மறுக்கப்பட்ட பொழுது கொடுத்த கழிவு இரத்து செய்யப்பட்டது. இதன் தாக்கத்தை சரி அடையாளமிட்டு காட்டுக?

| | சொத்து | பொறுப்பு | உரிமை |
|---|---|---|---|
| அதிகரிக்கும் | ………………….. | ……………………… | ………… |
| குறையும் | …………………. | ……………………… | ………… |
| மாற்றமில்லை | …………………. | ……………………… | ………… |

48. வணிகமொன்றின் உற்பத்தி தொடர்பான தகவல்கள் வருமாறு

- இலாபநட்டமற்ற புள்ளியில் விற்பனை வருமானம் ரூபா 45,000
- பொருளொன்றின் விற்பனை வருவாய் ரூபா 30
- மொத்த நிலையான கிரயம் ரூபா 18,000

பொருள் ஒன்றின் எல்லைக்கிரயம் யாது?

……………………………………………………………………………………..

49. ஒரு கம்பனி ஒரே மாதிரியான பொருட்களை உற்பத்தி செய்து அலகொன்று ரூபா 100 படி விற்பனை செய்கிறது. நிலையான கிரயம் ரூபா 35,000 ஆகவும் மாறும் கிரயம் அலகொன்றுக்கு ரூபா 60 ஆகவும் உள்ளது. ஏந்த விற்பனை மட்டத்தில் ரூபா 5,000 இலாபம் பெறப்படும்?

……………………………………………………………………………………

50. உற்பத்தி கம்பனி ஒன்று ஒவ்வொன்றும் ரூபா 200,000 கொள்விலையான இரண்டு இயந்திரங்களில் ஒன்றை கொள்வனவு செய்ய விரும்புகிறது. இவ்விரு இயந்திரங்களின் மூலமும் தொடர்ந்து வரும் காலங்களுக்கு மதிப்பிடப்பட்ட ஆண்டுக்கான இலாபம் வருமாறு

| ஆண்டு | இயந்திரம் I | இயந்திரம் II |
|---|---|---|
| 1 | 30,000 | 25,000 |
| 2 | 60,000 | 40,000 |
| 3 | 90,000 | 70,000 |
| 4 | 70,000 | 60,000 |
| 5 | 50,000 | 40,000 |
| எஞ்சிய பெறுமதி | 20,000 | 10,000 |

ஆரம்ப முதலீட்டின் அடிப்படையில் இயந்திரங்களுக்கான கணக்கீட்டு திரும்பல் வீதங்கள் யாது?

இயந்திரம் I ………………………………………..

இயந்திரம் II ……………………………………….

*******

முயற்சி பயிற்சி வெற்றி

kalvi.lk

முழுப்பதிப்புரிமையுடையது / All Rights Reserved

**DEVELOPMENT COMMITTEE OF EDUCATION – Mallavi** இனால்

நடாத்தப்படும் க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான விசேட பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு - 2019

பாடம் - கணக்கீடு திகதி – **09.07.2019**

**Mr.Kugan Kumarasamy B.Com (Hons) Acc.Spl**

சாயி தனியார் லிமிடெட் கம்பனியின் 31.03.2017 ஆம் திகதியிலானபரீட்சைமீதிவருமாறு

| விபரம் | வரவு (000) | செலவு (000) |
|---|---|---|
| சாதாரண பங்கு மூலதனம் (4000 பங்குகள்) | | 20000 |
| மீட்கப்பட முடியாத முன்னுரிமைப் பங்குகள் (2000 பங்குகள்) | | 10000 |
| 01.04.2016 இல் நிறுத்தி வைத்த வருவாய் | | 2500 |
| விற்ற பொருட்கிரயம் /விற்பனை | 175000 | 371800 |
| வங்கிக்கடன் | | 20000 |
| விநியோகச் செலவுகள் | 15000 | |
| நிர்வாகச் செலவுகள் | 12000 | |
| ஏனைய செலவுகள் | 7500 | |
| நிதிச்செலவுகள் | 2500 | |
| செலுத்திய வருமான வரி - 2015/2016 | 1600 | |
| - 2016/2017 | 5500 | |
| காணி | 150000 | |
| கட்டடம் | 12000 | |
| மோட்டார் வான் | 10500 | |
| இயந்திரம் | 4500 | |
| 01.04.2016 இலுள்ளவாறான தேய்மான ஏற்பாடு | | |
| - கட்டடம் | | 1200 |
| - மோட்டார் வான் | | 1900 |
| 31.03.2017 இல் தொக்கு | 2000 | |
| வியாபார வருமதியாளர்கள் | 5000 | |
| வியாபார சென்மதியாளர்கள் | | 5200 |
| குத்தகை சென்மதியாளர் | | 3500 |
| 01.04.2016 இல் வருமான வரி ஏற்பாடு | | 1500 |
| வங்கி | 13200 | |
| இடைக்கால பங்கிலாபம் செலுத்தியது | | |
| - சாதாரண பங்குகள் | 4000 | |
| - முன்னுரிமை பங்குகள் | 2000 | |
| முதலீடுகள் | 33500 | |
| தொங்கல் கணக்கு | | 18200 |
| | **455800** | **455800** |

**மேலதிக தகவல்கள் வருமாறு**

I. இறுதி தொக்கில் பழுதடைந்த தொக்கு ரூபா 450000 விற்பனைச் செலவு ரூபா 30000 செலவு செய்து வருட இறுதியின் பின்னர் விற்கப்பட்டது.

II. 2017.03.01 ஆம் திகதியில் தரத்திலும் குறைவான பொருட்களை விற்பனை செய்தமைக்காக இழப்பீட்டுத் தொகையாக ரூபா 500000 கோரி கம்பனிக்கு எதிராக வழக்கு வைக்கப்பட்டது. கம்பனி வழக்காடுனர் கருத்துப்படி இக் கோரிக்கை கம்பனிக்கு பாதகமாக இருப்பதற்கு கூடியளவு நிகழ்தகவு சாத்தியமுடையதாகும்.

III. கம்பனி 31.03.2017 இல் காணியினை மீள் மதிப்பீடு செய்தது. காணியின் பெறுமதி மீள்மதிப்பீட்டின் பின் ரூபா 200000000 ஆகும். இது புத்தகங்களில் காட்டப்படவில்லை.

IV. கம்பனியானது 01.04.2012 இல் ரூபா 1500000 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனத்தை 31.03.2017 இல் ரூபா 800000 இற்கு விற்பனை செய்தது. கிடைத்த பணம் வங்கிக்கணக்கு மற்றும் மோட்டார் வாகன கணக்கில் பதியப்பட்டது. மோட்டார் வாகனத்தை விற்றது தொடர்பில் வேறு எப்பதிவும் இடம்பெறவில்லை.

V. கம்பனியானது நிலையான சொத்துக்களுக்கு நேர்கோட்டு முறையில் பின்வருமாறு தேய்விடுகின்றது.

- மோட்டார் வான் - 25% வருடமொன்றிற்கு
- கட்டடம் - 10% வருடமொன்றிற்கு

I. 01.04.2016 இல் நிதிக்குத்தகையின் கீழ் இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்டது. அதன் நியாயப் பெறுமதி ரூபா 4500000 இதில் உடனடிக்காசாக ரூபா 1000000 செலுத்தப்பட்டதுடன் மிகுதியானது 31.03.2017 இலிருந்து 5 சமமான ஆண்டுத்தவணைகள் படி ரூபா 800000 ஆக செலுத்தி முடிக்க தீர்மானிக்கப்பட்டது. முதலாவது 31.03.2017 மற்றும் இரண்டாவது தவணைக்கட்டண குத்தகை வட்டி முறையே ரூபா 420000 மற்றும் ரூபா 370000 இனையும் உள்ளடக்கியுள்ளது. முதலாவது வருடாந்த தவணைக்கட்டணம் உரிய காலத்தில் செலுத்தப்பட்டது. செலுத்திய காசு வியாபார சென்மதியாளர் கணக்கில் வரவுவைக்கப்பட்டுள்ளது.

II. பரீட்சை மீதியில் காட்டப்பட்டுள்ள வங்கி மீதியானது மார்ச் 2017 வங்கிக்கணக்கு இணக்கக்கூற்று தயாரிக்கப்படுவதற்கு முன்னர் பெறப்பட்டதாகும். வங்கிக்கணக்கு இணக்கக்கூற்று தயாரிக்கும் போது பின்வரும் தகவல்கள் குறிப்பெடுக்கப்பட்டன.

- வங்கியில் வைப்பிலிட்ட போதிலும் தேறாத காசோலை ரூபா 5000000
- வழங்கப்பட்ட போதிலும் வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் ரூபா 3000000
- ரூபா 1000000 வருமதியாளர் ஒருவரால் வியாபார வங்கிக்கணக்குக்கு வைப்பிலிட்ட போதும் வியாபாரப் புத்தகங்களில் பதியப்படவில்லை.
- ரூபா 500000 பெறுமதியான காப்புறுதி தொகை வங்கியில் நிலையான கட்டளையின் பேரில் செலுத்தப்பட்டிருந்த போதிலும் வியாபார புத்தகங்களில் பதியப்படவில்லை.

III. வருடத்திற்கான வருமானவரிப் பொறுப்பு ரூபா 8500000 என மதிப்பிடப்பட்டது.

IV. கணக்கீட்டு செயன்முறையின் போது பின்வரும் தவறுகள் ஏற்பட்டதாக கண்டுபிடிக்கப்பட்டது.

- விற்பனைப்பட்டியல் ரூபா 2200000 கணக்கேடுகளிலிருந்து முற்றாக விடுபட்டிருந்தது.
- விளம்பரச்செலவு ரூபா 7500000 புத்தகங்களில் ரூபா 5700000 ஆக பதியப்பட்டது.
- பெற்றவாடகை ரூபா 10000000 வங்கிக்கணக்கில் சரியாகப் பதியப்பட்ட போதிலும் வாடகைச் செலவுக்கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.

V. கம்பனியினது இயக்குனர்களால் 30.05.2017 இல் பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டது. நிதிக்கூற்றுக்கள் 10.06.2017 இல் வெளியிட அங்கீகரிக்கப்பட்டது.

- 31.03.2017 இலுள்ள சாதாரண பங்குதாரர்களுக்கு பங்கொன்றுக்கு ரூபா 3 பங்கிலாபமும் முன்னுரிமை பங்குதாரர்களுக்கு பங்கொன்றுக்கு வருடம் ரூபா 2 பங்கிலாபமும் செலுத்துதல்.
- பொது ஒதுக்கத்திற்கு ரூபா 500000 இனை மாற்றுதல்.

kalvi.lk

**வேண்டப்படுவது:-**

1) 31.03.2017 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாப/நட்டம் மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானக்கூற்று.
2) 31.03.2017 இல் முடிவடைந்த ஆண்டுக்கான உரிமைமாற்றல் கூற்று.
3) 31.03.2017 இலுள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று.

Education கல்வி අධ්‍යාපන